# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2003, பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 55/2001
4668

## 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

குறுங்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் அத்தியாயம் I இன் பாகம் I இனை நீக்குதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் அத்தியாயம் I இன் பாகம் I (பிரிவு 2) இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "டீசல் மோட்டார் வாகன விதிப்பனவையும், ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "டீசல் மோட்டார் வாகன விதிப்பனவையும் ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு "குறித்துரைக் கப்பட்ட மோட்டார் வாகனம்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

> "குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம்" என்பது ஏதேனும் ஆடம்பர மோட்டார் வாகனம், ஏதேனும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம், அல்லது ஏதேனும் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் எனப் பொருள்படும்.".

கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

**5.** இச்சட்டத்தால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய் யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2001 ஒற்றோபர் 12 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.